## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No.132/2014 | Date : 12.01.2024 | PW1 |
|---|---|---|
| Name: பெருமாள் | S/o. **முத்தப்பன்** | |
| Evidence Recorded Time: 12.01 P.M. to 12.30 P.M. | | |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் என்றாலும் விபத்தில் இறந்த லதாவின் கணவர் என்றாலும் சரிதான். 2ம் மனுதாரர் என் மகள் என்றால் சரிதான், தற்போது அவருக்கு 26 வயது நடைபெறுகிறது. 2ம் மனுதாரருக்கு தற்போது திருமணம் நடைபெற்றுவிட்டது என்றால் சரிதான். 2ம் மனுதாரருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். குழந்தைகளுக்கு எத்தனை வயதாகிறது என்றால் ஒரு குழந்தைக்கு 3 வயதும், மற்றொரு குழந்தைக்கு 1 வயதும் ஆகிறது. 2ம் மனுதாரர் திருமணத்திற்கு பின்னிட்டு அவர் கணவருடன் மேட்டூரில் மகிழ்சியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். 3ம் மனுதாரர் என் மகன் ஆவார். என் மகன் பி.ஈ படித்து முடித்துள்ளார் என்றால் சரிதான். தற்போது எங்கு வேலை செய்து வருகிறார் என்றால் சென்ற ஆண்டுதான் படிப்பை முடித்தார் தற்போது வேலைக்கு செல்லவில்லை வீட்டில்தான் உள்ளார். எந்த கல்லூரியில் படிப்பை முடித்தார் என்றால் திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கல்லூரியில் படித்து முடித்தார். நானும், என் மகனும் மட்டும் தற்போது வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எந்த முகவரியில் வசித்து வருகிறோம் என்றால் மலமானூர், பொட்டனேரி அஞ்சலில் வசித்து வருகிறோம். நான் தற்போது என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.15,000/- வரை வரும். மாதத்திற்கு வடமாநிலங்களுக்கு சென்று வருவேன் என்றால் நான்குமுறை பெங்களூர் சென்று வருவேன். ஒரு முறை சென்று வந்தால் எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்றால் சாப்பாடு போக ரூ.3000/- கிடைக்கும். மனைவி இறந்த போனதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்தினை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன், இரு சக்கர வாகனத்தை நான்தான் ஓட்டிச் சென்றேன். ஓமலூர் காவல் நிலையத்தில் நான்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில்

புகார் கொடுத்தேன் என்றால் 29.12.2013 ல் புகார் கொடுத்தேன். நான் ஓட்டிச் சென்ற வாகனத்தின் வண்டி எண் தெரியுமா என்றால் TN 52 X 1987. நான் இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்று கொண்டிருந்தேன் என் மனைவி பின்னால் அமர்ந்து கொண்டிருந்தார் முன்னால் சென்ற டிரெய்லர் வண்டி HR 04 N 9899 திடீரென திரும்பியதால் நான் கட்டுப்பாட்டை இழந்து என் மனைவி இடது பக்கம் கீழே விழுந்ததில் அவர் மீது வண்டி ஏறிவிட்டது, நான் வலது பக்கம் விழுந்துவிட்டேன். ஓமலூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் மேற்படி சங்கதிகளைத்தான் சொல்லியுள்ளேனா என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் எதிரே வந்த கார் வேகமாக வந்ததால் நான் பிரேக் போட லாரியை ஓட்டிச் சென்றவர் வலது புறமாக திரும்ப லாரியின் பின் பக்கம் நான் வந்த வண்டியின் கண்ட்ரோல் இழந்து கீழே விழுந்துவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையிலும், முதல் விசாரணையிலும் முன்னுப்பின் முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனு விவரங்கள், முதல் விசாரணையில் உள்ள விவரங்களை நான் சொல்லிதான் வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் மனு மற்றும் திருத்தப்பாடு மனுலும் ஒரு விதமாகவும், சாட்சியத்தில் ஒரு விதமாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் மேஜாகியுள்ளதால் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். திருத்தப்பாடு மனுவில் என் மகளின் வயதையும் சேர்த்து திருத்தியுள்ளேன் என்றால் சரிதான். திருத்தபாடு மனுவில் இறந்துபோனவரின் பெயர் பெருமாள், த/பெ.லேட்.முத்தப்பன் என்று போட்டுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் 2014–ல் தாக்கல் செய்த மனுவிலும், திருத்தப்பாடு மனுவிலும் மாதம் இறந்து போன என் மனைவி எவ்வளவு சம்பாதித்து வருகிறார் என்றால் ரூ.6000/– சமபாதித்து வந்ததாக போட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். என் மனைவி சம்பாதிப்பதற்கான எந்த விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவின் படிப்பை சான்றிதழை மட்டும் தாக்கல் செய்துள்ளேன். நான் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தினை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. TN 52 X 1987 வாகனத்திற்கு ஆர்.சி புத்தகம், இன்சூரன்ஸ் காப்பி ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் முன்னுப்பின்

முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் எதிரே வந்த கார் ஓட்டுநர் என்றால் சரியல்ல. மேற்படி காரினை கண்டுபிடிக்க முடியாததால் இந்த லாரியின் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் முறையாக எந்த நடடிவக்கையும் எடுக்காத காரணத்தினால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.